செ.வெ.எண்:74/ ஜனவரி / 2019 நாள்:23.01.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காலியாக உள்ள அங்கன்வாடி மையப் பணியிடங்களுக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி,இ.ஆ.ப., தகவல்.**

----------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தில் 153 அங்கன்வாடி மையங்களில் காலிப்பணியிடங்களுக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**காலிப்பணியிடம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணியின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களில் காலிப்பணியிடங்களை நிரப்பிட தமிழக அரசால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதன்மை அங்கன்வாடி பணியாளர் பணிக்கு 55 காலிப்பணியிடங்களும், குறு அங்கன்வாடி மையப்பணியாளர் பணிக்கு 6 காலிப்பணியிடங்களும் நிரப்பப்பட உள்ளன. அங்கன்வாடி மைய உதவியாளர் பணிக்கு 92 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

**தகுதிகள்**

**முதன்மை அங்கன்வாடி மையப் பணியாளர்**

அங்கன்வாடி மையப் பணியாளர் பதவிக்கு 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மலைப்பகுதி விண்ணப்பதாரர்கள் 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 31.12.2018 அன்று 25 வயது முடிந்த மற்றும் 35 வயதிற்கு மிகாதவர்கள் விண்ணப்பிக்கலாம். விதவை மற்றும் ஆதரவற்ற விதவை 25 வயது முதல் 40 வயது வரை விண்ணப்பிக்கலாம். மலைப்பகுதி விண்ணப்பதாரர்களுக்கு 20 வயது முதல் 40 வயது வரை எனவும், மாற்றுத்திறனாளிகளுக்கு 25 வயது முதல் 38 வயது வரை எனவும் வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**குறு அங்கன்வாடி மைய பணியாளர்**

குறு அங்கன்வாடி மையப் பணியாளர் பதவிக்கு 31.12.2018 அன்று 25 வயது முடிந்த மற்றும் 35 வயதிற்கு மிகாதவர்கள் விண்ணப்பிக்கலாம். விதவை மற்றும் ஆதரவற்ற விதவை மலைப்பகுதி வசிப்பவர்கள் 25 வயது முதல் 40 வயது வரை விண்ணப்பிக்கலாம், மலைப் பகுதியில் வசிப்பவர்களுக்கு குறைந்தபட்ச வயது 20 எனவும் , மாற்றுத்திறனாளிகளுக்கு 25 வயது முதல் 38 வயது வரை என வயது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கல்வித்தகுதி மலைப்பகுதி வசிப்பவர்களுக்கு 8 ஆம் வகுப்பும். இதர இனங்களுங்கு 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**அங்கன்வாடி உதவியாளர்**

அங்கன்வாடி உதவியாளர் பதவிக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதுமானது. 31.12.2018 நாளன்று 20 வயது முடிவுற்ற 40 வயது மிகாதவர்கள். அதிகபட்ச வயதான 40 லிருந்து 5 வருடம் கணவனை இழந்தவர்கள், ஆதரவற்ற விதவை மற்றும் மலை பகுதியில் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விண்ணப்பதாரர்கள் காலிப்பணியிடம் சார்ந்த அதே கிராமத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும். தகுதியான நபர் அதே கிராமத்தில் இல்லாவிடில், அதே கிராம பஞ்சாயத்தை சேர்ந்த அருகில் உள்ள கிராமத்தை சேர்ந்தவரை தேர்ந்தெடுக்கலாம். குறிப்பிடப்பட்ட கிராம பஞ்சாயத்தில் தகுதியான நபர் பெறாவிடில் 10 கி.மீ தொலைவிற்கு உட்பட்ட அருகில் உள்ள பஞ்சாயத்தை சேர்ந்தவராகவும் இருக்கலாம். நகர்புறங்களில் அங்கன்வாடி பணியாளர் அதே வார்டினை

சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். தகுதியான நபர் அதே வார்டில் இல்லாவிடில் அருகில் உள்ள வார்டினை சேர்ந்தவராக இருக்கலாம். தகுதியான நபர் அருகில் உள்ள வார்டிலும் இல்லாத பட்சத்தில் அதே கோட்டத்தை சேர்ந்தவராக இருக்கலாம்.

**விண்ணப்பதாரரின் வசிப்பிட ஆதாராமாக வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை , ஆதார் அட்டை அல்லது வீட்டு வரி ரசீது ஏதேனும் ஒரு சான்று இணைக்கப்பட வேண்டும்**

மாற்றுத் திறனாளிகள் 6 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை பராமரிக்க தகுதிவாய்நத மாற்றுத்திறனாளிகள் (உடல் ஊனம் மட்டும்) விண்ணப்பிக்கலாம். அரசாணைப்படி 4 சதவீத இட ஒதுக்கீட்டில் பணிநியமனம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவங்களை சம்பந்தப்பட்ட வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேலும் www.icds.tn.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள படிவத்தை நகல் எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 23.01.2019 முதல் 11.02.2019 வரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மாவட்ட திட்ட அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை (சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர அனைத்து வேலை நாட்களில்) விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி.இஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**